# கருப்பை கட்டிகளும் நீங்களும்

## கருப்பை கட்டிகள் என்றால் என்ன?

கருப்பை கட்டிகள் என்பவை கருப்பையினுள் (உள்ளே) அல்லது அதன்மேல் ஏற்படும் பொதுவான புற்று நோயல்லாத வளர்ச்சிகளாகும்.(கருவகம்).சிறிய பட்டாணி அளவில் இருந்து திராட்சை பழ அளவு வரையான அளவுகளில் காணப்படும். கருப்பை தசையின் சுவற்றை உருவாக்கும் செல்களில் இருந்து இந்த கருப்பை கட்டிகள் உருவாகின்றன. பல கருப்பை கட்டிகள் எந்த கோளாறுகளையும் ஏற்படுத்துவதில்லை அல்லது எந்த வைத்தியமும் தேவையில்லை. கருப்பை கட்டிகளுக்கு காரணம் தெரியாதது. கறுப்பினப் பெண்களும் மற்றும் கருப்பை கட்டிகளை உடைய குடும்ப வரலாற்றை உடைய பெண்களும் அதிகமாக இதனால் பாதிக்கப்படுகிறார்கள். குழந்தை சுமக்கும் வருடங்களில் ஈஸ்ட்ரோஜன் போன்ற நாளமில்லா சுரப்பு நீர்களால் கருப்பை கட்டிகள் வளர்கின்றன. இறுதி மாதவிடாயின்போது பொதுவாக கருப்பை கட்டிகள் சுருங்கிவிடும்.




## நான் கருப்பை கட்டிகளைக் கொண்டிருக்கிறேன் என்று எவ்வாறு நான் தெரிந்து கொள்வது?

பல கருப்பை கட்டிகள் மிகப் பெரியதாக இருந்தாலும் எந்த ஒரு அறிகுறிகளையும் ஏற்படுத்தாது. கோளாறுகள் ஏற்படுவதாக இருந்தாலும் அவை அதிகமான அல்லது ஒழுங்கில்லாத இரத்தப்போக்கு, வலியுள்ள மாதவிடாய், அடிவயிற்று வலி, அடிவயிறு கனமாதல் அல்லது வீக்கம், உடலுறவின்போது வசதிக்குறைவு, அடிக்கடி சிறுநீர் கழிதல் அல்லது குடல் அசைவுகளில் கோளாறுகள் போன்றவை ஏற்படுகின்றன. சில நேரங்களில் கருப்பை கட்டிகளால் கருவுறுதல் பாதிக்கப்பட்டாலும் கருப்பை கட்டிகளையுடைய பல பெண்கள் குழந்தை பெறுவதற்கு சிரமம் அடைவதில்லை.

வழக்கமான கூபக சோதனையின் மூலம் பெரும்பாலான கருப்பை கட்டிகளைக் காணலாம். மேலும் பரிசோதனைகள் தேவைப்பட்டால் உங்கள் உடல் நல காப்பாளர் ஒரு கூபக *அல்ட்ரா சவுண்ட்* பரிசோதனைக்கு ஆணையிடலாம். இந்த பரிசோதனை ஒலி அலைகளை உருவாக்கி, கர்ப்பப்பை மற்றும் அதைச் சுற்றியுள்ள உறுப்புகளின் படத்தை காட்ட உதவுகிறது. பெரிய கருப்பை கட்டிகளைக் காண *வயிற்று அல்ட்ரா சவுண்ட்*, சிறிய கட்டிகளைக் காண *யோனி அல்ட்ரா சவுண்ட்* சிறந்தவை.

## எவ்வாறு கருப்பபை கட்டிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றனறன?

நீங்கள் அனுபவிக்கும் அறிகுறிகள், அவற்றின் அளவு மற்றும் இருப்பிடம், உங்கள் வயது, உங்கள் பொதுவான உடல்நிலை மற்றும் உங்களுக்கு குழந்தை தேவையா என்பதைப் பொறுத்து கருப்பை கட்டிகளை குணப்படுத்தலாம். அறிகுறிகளை வெளிப்படுத்தாத கருப்பை கட்டிகளை குணப்படுத்த தேவையில்லை. இறுதி மாதவிடாய் சமயத்தில் கண்டுபிடிக்கப்படும் கருப்பை கட்டிகள் தானாகவே சுருங்கிவிடும் மற்றும் அதை கவனித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதும். நீங்கள் இரத்தப்போக்கை அனுபவித்தால், டிரான்எக்ஸாமிக் ஆசிட் (Cyklokapron®) அல்லது கா்ப்பத்தடை மாத்திரைகள் இரத்தப்போக்கை கட்டுப்படுத்தலாம். உங்களது உடலில் உற்பத்தியாகும் பெண் ஹார்மோன்களைத் தடுக்கும் அதிக சக்தி உள்ள மருந்துகளான (Danazol, Lupron®, Synarel®, Zoladex®) கருப்பை கட்டிகளை சுருங்க வைக்க முடியும் அதே நேரம் இரத்தப்போக்கையும் மெதுவாக்கி நிறுத்த முடியும். ஒரு கருப்பையுள் செலுத்தும் கருவி (IUD, லூப்) மூலம் சில பெண்களுக்கு உதவலாம். அது கருப்பை சுவற்றினுள் ஹார்மோனைசிறிய அளவில் விடுகிறது.மருத்துவ அலுவலக செயல்பாடு மூலம், Mirena® என்ற கருவி மூலம் கருப்பைக்குள் செலுத்தப்படுகிறது.

*யுடரின் பைப்ராய்ட் எம்பொலைசேஸன்* என்பது ஒரு புதிய அறுவை சிகிச்சையற்ற செயல்பாடு நாட்டின் சில இடங்களில் கிடைக்கிறது. அது கருப்பை கட்டிகளுக்குள் ஓடும் இரத்தத்தை தடுத்து நிறுத்தி அவற்றை சுருங்கச் செய்கிறது. *மயோமெக்டமீ* என்ற அறுவை சிகிச்சை செயல்பாட்டின் மூலமும் அல்லது *மயோலைசிஸ்* மூலம் மின்சாரம் அல்லது லேசரை பயன்படுத்தி அழிக்கப்பட்டு கருப்பை கட்டிகள் அகற்றப்படலாம். எந்த ஒரு வைத்தியமும் வெற்றி பெறவில்லையெனில் கருப்பை அகற்றம் தேவைப்படலாம். உங்கள் உடல் நல காப்பாளா் எந்த வகையான சிகிச்சை தோ்வு உங்களுக்கு சரியானது என்று முடிவு செய்ய உங்களுக்கு உதவுவார்.சில சமயங்களில் உங்களுக்கு ஒருநிபுணா் தேவைப்படுவார்.

## கடைசி வார்த்தை

கருப்பை கட்டிகள் அதிகம் பரவலானவை மற்றும் வழக்கமாக அவை பிரச்சனைகளை ஏற்படுத்துவதில்லை. ஆப்படி அவை அறிகுறிகளை ஏற்படுத்தினால், பல வகையான மருந்துகள், அறுவை சிகிச்சை முறைகளும் உதவக்கூடும். உங்கள் உடல் நல காப்பாளரிடம் பேசி உங்களுக்குரிய சிறந்த வழிகளைப் பற்றி விவாதியுங்கள்.

www.benignuterineconditions.ca

Centre for Effective Practice
Department of Family and Community Medicine
University of Toronto

© 2005. எல்லா உரிமைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டவை.

இந்த தகவல், தகவல் நோக்கத்திற்கு மட்டுமே- தொழில்ரீதியான மருத்துவ புத்திமதி, நோயறிதல் அல்லது சிகிச்சைக்கு மாற்று அல்ல. உங்கள் ஆரோக்கிய நலக் காப்பாளரிடம் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலைக்கு ஆலோசனை செய்யவும்.

இந்த ஆவணம் உருவாக ஒண்டாரியோ பெண்கள் ஆரோக்கிய கவுன்சில் (Ontario Women's Health Council) நிதி அளித்தது. ஒண்டாரியோ பெண்கள் ஆரோக்கிய கவுன்சில்- (Ontario Women's Health Council) ஆரோக்கிய மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சரவையால் முழுவதுமாக நிதி பெற்றதாகும். இந்த ஆவணம்--ஆரோக்கிய மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சரவையின் சம்மதத்தை அவசியமாகப் பிரதிபலிக்கத் தேவையில்லை.